# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 164 | 4 Pages | 16.1.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 164 | 4 பக்கங்கள் | 16.1.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## அயோத்தி ராமர் கோவிலில் பிரதமர் மோடி பூஜை செய்ய காஞ்சி சங்கராச்சாரியார் ஆதரவு



புதுடெல்லி, ஜன.16

அயோத்தி ராமர்கோவிலில் பிரதமர் மோடி பூஜை செய்வதற்கு பூரி சங்கராச்சியார் மற்றும் சில மடாதிபதிகள் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். வருகிற 22ந் தேதி அன்று ராமர் கோவில் கும்பாபிஷேக நாளில் பிரதமர் மோடி அங்கு பூஜை செய்வதற்கு பூரி கோவர்த்தன பீட மடத்தின் சங்கராச்சாரியாரான நிஸ்காலந்தா சரஸ்வதி சாமிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி சிலையை பிரதிஷ்டை செய்வதை பார்த்து நான் கைதட்ட வேண்டுமா?

வழிபாட்டு தலங்கள் சுற்றுலா தலங்களாக மாறுவதை ஏற்க முடியாது. எனக்குசிலகட்டுப்பாடுகள்உள்ளன. நான்அதில்பங்கேற்கபோவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

இதே போன்று உத்தரகாண்ட் ஜோதிமடத்தை சேர்ந்த அலி முக்தேஸ்வரானந்த் சரஸ்வதி சாமிகள் உள்பட 4 மடாதிபதிகள் பிரதமர் மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் காஞ்சி சங்கராச்சாரியாரான விஜயேந்திர சரஸ்வதி சாமிகள், பிரதமர் மோடிக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:

பிரதமர் மோடி மக்களின் ஆதரவை பெற்றவர் ஆவார். எனவே ராமர்கோவிலில் பூஜைகள் செய்வதற்கு அவருக்கு எல்லா உரிமைகளும் உள்ளன. புனித தலங்களின் வளர்ச்சியில் பிரதமர் மோடிக்கு நம்பிக்கை உள்ளது. கேதர்நாத் மற்றும் காசி விஸ்வநாதர் கோவில்களின் வளாகத்தையும், அவர் விரிவுபடுத்தியுள்ள பாரம்பரிய முறைப்படி நடக்கும் ராமர் கோவில் விழாவுக்கு நாங்கள் ஆதரவாக இருக்கிறோம்.


இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். சிருங்கேரி சாரதா பீடத்தின் தட்சிணா சாயாவும், பிரதமர் மோடிக்கு தனது ஆதரவை தெரிவித்து உள்ளார். ராமர் கோவில் விழா இந்து மத சடங்குகளு டன் முழுமையாக ஒத்துப்போகிறது என்றும், நாட்டு மக்களின் பிரதிநிதியான பிரதமர் மோடிக்கு குருமார்களின் வழிகாட்டுதலின்படி சடங்குகளை செய்வதற்கு முழு உரிமையும் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே மத்திய மந்திரி நாராயண ரானேவிடம் சில சங்கராச்சாரியார்களின் எதிர்ப்பு பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதில் அளித்த அவர், சங்கராச்சாரியார்கள் ராமர் கோவிலை ஆசீர்வதிக்க வேண்டும். விமர்சிக்க கூடாது என்று கருத்து தெரிவித்தனர்.

இந்து மதத்துக்கு அவர்கள் செய்த பங்களிப்பு என்ன? என்றும் கேள்வி எழுப்பினார். இதற்கு சிவசேனா தலைவர் சஞ்சய் ராவத் பதிலடி கொடுத்து உள்ளார். இந்து மதத்தின் சங்கராச்சாரியார்களின் பங்களிப்பு என்ன? என்று கேள்வி எழுப்பிய மத்திய மந்திரி ரானேவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே பிரதமர் மோடி சங்கராந்தி விழாவையொட்டி டெல்லியில் உள்ள தனது இல்லத்தில் பசுக்களுக்கு உணவு வழங்கினார்

## ஓடுபாதையில் உணவு அருந்திய பயணிகள் சிந்தியா அதிரடி முடிவு




டெல்லி, ஜன.16

கடந்த நவம்பர் 2023 முதல், வட இந்தியாவில் பனிப்பொழிவு மிக கடுமையாக உள்ளது.

குறிப்பாக, தலைநகர் புது டெல்லியில், பனிப்பொழிவின் கடுமை அதிகரித்துள்ளதால் விமான சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை அன்று கோவாவில் இருந்து டெல்லி செல்ல வேண்டிய 6E2195 எனும் விமானம், பனிப்பொழிவின்காரணமாக டெல்லிக்குசெல்லஅனுமதிமறுக்கப்பட்டு,மும்பைவிமானநிலையத்தில் தரையிறங்க, விமான நிலைய அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

கோவாவில் இருந்து புறப்படும் போதே இவ்விமானம் அதிக தாமதத்திற்கு உள்ளானதால், பயணிகள் மிகுந்த கோபத்தில் இருந்தனர்.

மும்பையில் தரையிறக்கப்பட்டதும் அவர்களுக்கு முறையான இரவு உணவு கூட கிடைக்காமல் திண்டாடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டி இருந்ததால், சில பயணிகள், விமான நிலைய ஓடுபாதையிலேயே அமர்ந்து உணவு உண்டனர். இது குறித்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவியது.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்து, மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, துறை சார்ந்த முக்கிய அதிகாரிகள் அனைவருடனும் பேச்சு வார்த்தை நடத்தினார்.

தொடர்ந்து, அத்துறையின் சார்பில் மும்பை விமான நிலையத்திற்கும், இண்டிகோ விமான அலுவலகத்திற்கும் விளக்கம் தர கோரி, "ஷோ காஸ் நோட்டீஸ்" (showcause notice) அனுப்பப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

இண்டிகோ மற்றும் மும்பை சர்வதேச விமான நிலையங்கள் சூழ்நிலையை எதிர்கொள்ளும் விதமாக ஆலோசித்து நடவடிக்கை எடுக்கவில்லை.

பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திருந்தால் இச்சம்பவம் நடந்திருக்காது. பயணிகள் இறங்கியவுடன் நிலையத்திற்கு விரைந்து செல்லும் வகையில் விமானத்தை நிறுத்த இடத்தை ஒதுக்காமல், தொலைவில் புதிய இடத்தை நிலையம் வழங்கியது பெரும் தவறு. இதனால் பல பயணிகள் நடக்க முடியாமல் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

பயணிகளுக்கு இதனால் உணவு விடுதி மற்றும் ஒப்பனை அறைக்கான வசதி உடனடியாக கிடைக்கவில்லை.

இந்த தவறுகளுக்கு அந்த நோட்டீசில் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

## பாலமேடு ஜல்லிக்கட்டு: அமைச்சர் மூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார்

மதுரை, ஜன.16

தமிழகத்தில் மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஜல்லிக் கட்டுப் போட்டிகள் பார்வையாளர் களை மிகவும் கவர்ந்த போட்டிக ளாகக் கருதப்படு கின்றன. புகழ்பெற்ற இந்த ஜல்லிக் கட்டு போட்டிகளில் மதுரை மட்டு மில்லாது, தமிழகம் முழுவதும் உள்ள சிறந்த காளைகள் பங்கேற் கும்.

இதற்கிடையே, அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நேற்று சிறப் பாக நடைபெற்றது.

இந்நிலையில், மதுரை பாலமேட் டில் இன்று காலை மாடுபிடி வீரர் கள் அமைச்சர் மூர்த்தி



முன்னிலையில் உறுதி மொழி ஏற்ற னர். இதையடுத்து, ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் மூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத் தார்.

இதில் 1,000 காளைகள், 700 மாடு பிடி வீரர்கள் போட்டியில் பங்கேற்க உள்ளனர். முதல் சுற்று தொடங்கி வாடிவாசல் வழியாக முதலாவதாக கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட உள்ளன. முதல் சுற்றில் 50 வீரர்கள் பங்கேற்ற உள்ளனர்.

இதில்வெற்றிபெறும்வீரர்களுக்கு கார் உள்ளிட்ட ஏராளமான பரிசு பொருட்களும் வழங்கப்படுகின் றன. ஜல்லிக்கட்டுப் போட்டியை ஏராளமாக மக்கள் கண்டுகளித்து வருகின்றனர்.

## பொங்கல் திருநாளிலே நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய பொறுப்புகளும் கூடியிருக்கிறது: கனிமொழி

சென்னை, ஜன.16

நாடு முழுவதும் பொங்கல் பண் டிகைசிறப்பாககொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் கனி மொழி தனது வாழ்த்து செய்தியை எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் கூறியிருப்பதாவது,

ஜாதி பேதங்கள் கடந்து நாம் அத் தனை பேரும் தமிழர்களாக, மனிதர் களாக ஒன்றிணைந்து கொண்டாடக் கூடிய திருநாளே தை பொங்கல் திருநாள்.

மகிழ்ச்சி பொங்கிடும் இந்த திரு நாளிலே நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய பொறுப்புகளும் கூடியி ருக்கிறது.

கடந்த மாதம் சென்னையில் பெரும் மழை பாதிப்புகள், அதே போல தென் மாவட்டங்களில் மிக பெரிய வெள்ள பாதிப்பில் சிக்கி மக் கள் பட்ட வேதனையையும் நாம் பார்த்தோம்.

இரண்டுமே காலநிலை மாற்றத் தால் வரக்கூடிய பாதிப்புகள் என் பதை நாம் உணரவேண்டும். இது போன்ற பாதிப்புகளில் இருந்து நமது எதிர்கால தலைமுறைகளை பாதுகாப்பது என்பது மிக முக்கியமான ஒன்று. இதுபோன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் உத விக்கரம் நீட்ட வேண்டும் என்ப தைப் பொங்கல் திருநாளில் உறுதி யேற்க வேண்டும்.

ஓயாது ஒளி வீசும் உதயசூரியனை யும், உயிரெனக் கொண்டிருக்கும் தமிழையும், மெய்யெனப் பற்றியி ருக்கும் தமிழ்நாட்டையும் கொண் டாடிடப் பிறக்கும் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திரு நாள், அனைவருக்கும் சிறப்புற அமைய எனது வாழ்த்துகள்!

ஓயாது ஒளி வீசும் உதயசூரியனை யும், உயிரெனக் கொண்டிருக்கும் தமிழையும், மெய்யெனப் பற்றியி ருக்கும் தமிழ்நாட்டையும் கொண் டாடிடப் பிறக்கும் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திரு நாள், அனைவருக்கும் சிறப்புற அமைய எனது வாழ்த்துகள்!

மக்கள் நீதி மய்யம் கமல்ஹாசன் தனது பொங்கல் வாழ்த்து செய் தியை மக்களுக்கு அளித்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது,

இயற்கையை வாழ்த்தும் நாள், உழைப்பில் உதவும் சக உயிர்களுக்கு நன்றி சொல்லும் நாள், விதைத்த பொருளின் விளைச்சலை பார்த்து விம்மிதம் கொள்ளும் நாள். சாதி மத பேதமின்றி தமிழர் கூடிக் கொண்டா டும் நாள் என மகிழ்வுகளை அள்ளி வரும் தைப்பொங்கல் நாளில் உங் களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு அவர் கூறி யுள்ளார்.

## சாதி மத பேதமின்றி தமிழர் கூடிக் கொண்டாடும் நாள் கமல்ஹாசன் பொங்கல் வாழ்த்து

சென்னை, ஜன.16

மக்கள் நீதி மய்யம் கமல்ஹாசன் தனது பொங்கல் வாழ்த்து செய்தியை மக்களுக்கு அளித்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது,

இயற்கையை வாழ்த்தும் நாள், உழைப்பில் உதவும் சக உயிர்களுக்கு நன்றி சொல்லும் நாள், விதைத்த பொருளின் விளைச்சலை பார்த்து விம்மிதம் கொள்ளும் நாள். சாதி மத பேதமின்றி தமிழர் கூடிக் கொண்டாடும் நாள் என மகிழ்வுகளை அள்ளிவரும் தைப்பொங்கல் நாளில் உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




# அனைவர் இல்லங்களிலும், நலமும், வளமும், மகிழ்ச்சியும் பொங்கட்டும் அண்ணாமலை



சென்னை, ஜன.16

தமிழகத்தில் பொங்கல் திருநாள் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி அரசியல் கட்சிதலைவர்கள், திரைப் பிரபலங்கள் உள்ளிட்டோர்வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை பொங்கல் வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

உயிர்கள் அனைத்திற்கும் உணவளிக்கும் உழவர் பெருமக்களின் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தன்று, தமிழக மக்கள் அனைவருக்கும் தமிழக பாஜக சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்பொங்கலும், செங்கரும்பும், காய்கனிகளும் படைத்து, காரிருள் அகற்றும் கதிரவனை வணங்கி நன்றி சொல்லி இந்நன்னாளைக்கொண்டாடுவோம். அனைவர் இல்லங்களிலும், நலமும், வளமும், மகிழ்ச்சியும் பொங்கட்டும். பொங்கலோ பொங்கல். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் பலத்த பாதுகாப்பு: 3கி.மீ. தூரத்துக்கு தடுப்புகள் அமைப்பு



சென்னை: ஜன.16

சென்னையில் வருகிற 17ந்தேதி காணும் பொங்கலன்று பொதுமக்கள் கடலில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்காக மெரினா கடற்கரையில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 3 கி.மீ தூரத்துக்கு கடற்கரையில் தடுப்பு கட்டை அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பொது மக்கள் கடலில் இறங்கி குளிக்காமல் இருக்க தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. 50க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட உள்ளது. திருட்டு, மற்றும் வழிப்பறி சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க போலீசார் சாதாரண உடையில் கண்காணிக்க உள்ளனர்.

பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையிலும் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு செய்யப்பட உள்ளது. டிரோன்கள் மூலமும் கண்காணிக்கப்பட உள்ளது.

கடற்கரைக்குப் பெற்றோருடன் வரும் குழந்தைகள் கூட்ட நெரிசலில் காணாமல் போனால் உடனடியாக மீட்பதற்காகக் குழந்தை களுக்கு பாதுகாப்பு கவசம் போன்று அடையாள அட்டைகளை கைகளில் கட்டி விட திட்டமிடப்பட்டு உள்ளது.

# கிராம மக்கள் உற்சாகமாக கொண்டாடிய குதிரை பொங்கல் விழா



குள்ளனம்பட்டி, ஜன.16

திண்டுக்கல் அருகில் உள்ள சிறுமலை மற்றும் அதனை சுற்றி 20க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் உள்ளன. சாலை போக்குவரத்து வசதி இல்லாத இங்கு பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் குதிரைகளை பயன்டுத்தி வருகின்றனர். இங்கு மா, பலா, எலுமிச்சை, சவ்சவ், அவரை உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. இவற்றை விளை நிலங்களில் இருந்து சந்தைகளுக்கு கொண்டு வரவும், மீண்டும் தங்கள் ஊருக்கு வந்து செல்லவும் குதிரைகளை பயன்படுத்தி வருகின்றனர். வருடந்தோறும் மாட்டுபொங்கல் தினத்தன்று இங்கு குதிரை பொங்கல் விழா கொண்டாடப்படும். அதன்படி இன்று கிராம மக்கள் குதிரை பொங்கல் விழாவை உற்சாகமாக கொண்டாடினர்.

இது குறித்து சிறுமலையை சேர்ந்த விவசாயி தங்கபாண்டி கூறுகையில், மலைப்பகுதிகளில் சாலை வசதி இல்லாததால் விவசாய நிலங்களில் விளைவிக்கக்கூடிய மலை பயிர்களான வாழை, பலா, எலுமிச்சை, சவ்சவ் உள்ளிட்ட பயிர்களை குதிரைகளில் ஏற்றி பழையூர், புதூர், தென்மலை ஆகிய பகுதிகளுக்கு கொண்டு வருகின்றோம். இவ்வாறு விவசாயிகளுக்கு உதவும் குதிரைகளை இன்று குளிக்க வைத்து வண்ண வண்ண கலரில் பொட்டு வைத்து, மாலை அணிவித்து, சலங்கை கட்டி அலங்காரம் செய்து அவை உண்பதற்கு பொங்கல் வைத்து வழிபட்டு வருகிறோம்.

மேலும் இன்று குதிரைகளுக்கு முழு ஓய்வு அளித்து அதை சுதந்திரமாக மேய்ச்சலுக்கு விட்டுள்ளோம். எந்த வேலையும் கொடுக்க மாட்டோம். எங்கள் விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய குதிரைகளை தெய்வமாக வழிபட்டு பொங்கல் வைத்து கொண்டாடி வருகிறோம். மேலும் எங்களுக்கு உற்ற துணையாக இருக்கும் கால்நடைகளுக்கு சிறுமலையில் கால்நடை மருத்துவமனை இல்லாததால் வாடகை வாகனம் பிடித்து மருத்துவமனைக்கு செல்லும் சூழ்நிலை உள்ளது. இதனால் எங்களுக்கு வீண் செலவு ஏற்படுகிறது. எனவே சிறுமலையில் கால்நடை மருத்துவமனை அமைக்க மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# சுருளிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாசில்லா பொங்கல் தின விழா கொண்டாட்டம்




கம்பம், ஜன.16

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள், சமூக ஆர்வலர் ஒன்று கூடி மாசில்லா பொங்கல் வைத்தும் அதனைத் தொடர்ந்து சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளை முன்னிட்டும் பள்ளி மாணவர்களுக்கு சுருளிப்பட்டி அன்பு ராஜா மரக்கன்றுகளை வழங்கி மாசில்லா பொங்கல் மற்றும் இளைஞர் தினத்தை கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் வனிதா, பெரிய கருப்பன். அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சாந்தி,மல்லிகா ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் மாணவர்களிடம் தைத்திருநாளை நாம் பாரம்பரியமாக கொண்டாடி வருகின்றோம் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக பொங்கல் வைத்தால் அதிகம் காற்று மாசுபடும் அதனால் அனைவரும் இணைந்து ஒரே பொங்கலாக நாம் மாசில்லா பொங்கல் வைப்போம் காற்று மாசுபாட்டை தடுப்போம், சுற்றுச்சூழலை பாதுகாப்போம் என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தொடர்ந்து சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் கொண்டாடும் வகையில் பள்ளி வளாகத்தில் மரக்கன்று நடுவோம்,நமது பள்ளியை தூய்மை பள்ளியாக வைத்திருப்போம் என ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர் சுருளிப்பட்டி அன்பு ராஜா மூலம் மாணவர்களுக்கு எடுத்துக் கூறி கொண்டாடப்பட்டது.

# பர்கூர் சட்டமன்ற அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா



கிருஷ்ணகிரி, ஜன.16

பொங்கல் திருநாளை யொட்டி, பர்கூர் சட்டமன்ற தொகுதி சார்பாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளருமான, பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் கலந்து கொண்டு பர்கூர் சட்டமன்ற அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் கழக மூத்த முன்னோடிகள்,மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள்,அனைத்து அணிகளின் தலைவர்கள்,துணை தலைவர்கள், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், பாகமுகவர்கள், கழக தொண்டர்கள், வட்ட செயலாளர்கள், வட்ட பிரதநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் விழாவினை சிறப்பித்தனர்.

# கடும் பனிபொழிவு: வாகன ஓட்டிகள் அவதி



சென்னை, ஜன.16

திருவள்ளூரில் இன்று அதிகாலையில் இருந்து கடும் பனிமூட்டம் நிலவியது. திருவள்ளூர் சுற்றுவட்டாரா பகுதிகள், திருப்பதி நெடுஞ்சாலை உள்ளிட்ட இடங்களில் வெள்ளை போர்வை போற்றியது போல் பனி மூட்டம் காணப்படுகிறது.

இந்நிலையில், மூடு பனி காரணமாக எதிரில் வரும் வாகனங்கள் தெரியாத அளவிற்கு பனிப்பொழிவு காணப்பட்டதால் வாகன ஓட்டிகள் முகப்பு விளக்குகளை எரியவிட்டவாறு வாகனங்களை இயக்கினர்.

இன்று பொங்கல் பண்டிகை என்பதால் பொங்கல் பண்டிகையை கொண்டாட பொதுமக்கள் பொங்கல் வைக்க தேவையான கரும்பு, பானை போன்ற பொருட்களை வாங்க வரும்போது கடும் குளிரிலும் அவதியுற்று வருகிறார்கள்.

குறிப்பாக, எப்போதும் பரபரப்பாக காணப்படும் சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் கடுமையான பனிமூட்டம் காரணமாக வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர். பனி குறையாமல் உள்ளதால் பொதுமக்களும், வாகனஓட்டிகளும் சிரமத்துக்குள்ளாகினர்.

# அமைதி, நல்லிணக்கம் மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்தை வளர்க்கட்டும் கவர்னர் ஆர்.என்.ரவி பொங்கல் வாழ்த்து



சென்னை, ஜன.16

நாடு முழுவதும் பொங்கல் பண்டிகையானது கோலாகலமாக கொண்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும், முக்கிய பிரபலங்களும் தங்களது வாழ்த்து செய்தியை மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

பொங்கல், மகரசங்கராந்தி, உத்தராயன், பௌஷ்பர்வ, லோரி ஆகிய விசேஷமான தினங்களில் உலகெங்கிலும் உள்ள நமது சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது அன்பான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடு முழுவதும் ஒற்றுமையாக கொண்டாடப்படும் இந்த அறுவடை திருவிழா, நமது வளமான ஆன்மிக மற்றும் பெருமைக்குரிய பாரம்பரியத்தின் வாழும் சாட்சியாகும். மேலும், கலாசார ஒருமைப்பாடு மற்றும் பாரதத்தை ஒரே தேசமாக இவை வரையறுக்கின்றன.

இந்த பண்டிகைகள் நமக்கு வளத்தையும் நல்ல ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் அளித்து அமைதி, நல்லிணக்கம் மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்தை வளர்க்கட்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

# தமிழ்நாடு மாநில ஜூனியர் தரவரிசை இறகு பந்து போட்டி




நெல்லை.13

திருநெல்வேலி மாவட்ட இறகுப்பந்து கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநில இறகுப்பந்து போட்டி (19 வயதிற்கு உட்பட்டோர்) பாளையங்கோட்டை வ.உ.சி உள்விளையாட்டு அரங்கில் ஜனவரி 13 முதல் 17 வரை நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்டத்தை மாநில அளவில் வெளிப்படுத்திய திருநெல்வேலி மாவட்ட இறகுப்பந்து கழக தலைவர், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையில் மண்டல இயக்குனர் பேராசிரியர் டாக்டர் லயனல்ராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார், சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் கலந்துகொண்டு இறகு பந்து போட்டியை துவக்கி வைத்தார்கள் மேலும் பாராளுமன்ற உறுப்பினர் அன்புமணி ராமதாஸ் (இந்திய இறகு பந்தாட்ட கழக துணைத் தலைவர் மற்றும் தமிழ்நாடு இறகு பந்தாட்ட கழக தலைவர்) மற்றும் அருணாச்சலம் இந்திய இறகுப்பந்தாட்ட செயற்குழு உறுப்பினர், சுப்பிரமணியன் முதன்மை துணைத் தலைவர் தமிழ்நாடு இறகுப்பந்து கழகம், பிரேம்குமார் முதன்மை மண்டல மேலாளர் , வினோத் குமார் கவர்னர் நிதி குழு தமிழ்நாடு இறகுப்பந்து கழகம், செய்யது மீரான் துணைத்தலைவர் திருநெல்வேலி மாவட்ட இறக்குப்பந்து கழகம், ரவீந்திரன் குருவையா செயலாளர், டாக்டர் சாகுல் ஹமீது உடற்கல்வி இயக்குனர் முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, டாக்டர் செய்யது முஹம்மது காஜா துணை முதல்வர் சதக்கத்துல்லா அப்பா கல்லூரி பாளையங்கோட்டை, உஸ்மான் பைலட் இறகுப்பந்து கழகம் மேலப்பாளையம் திருநெல்வேலி மாவட்ட இறகுப்பந்து கழகம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட இறகுப்பந்து கழக உறுப்பினர்கள் வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்து விளையாட்டு வீரர்களை ஊக்குவித்தது முழுமையாக தங்களை அர்ப்பணித்து நன்கொடைகளை அள்ளிக் கொடுத்த குழுமம், காவேரி மருத்துவமனை, கிருஷ்ணா மைன்ஸ், லட்சுமி காயத்ரி ஹோட்டல், மணி–கோ, டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை திருநெல்வேலி சார்பாக அனைத்து விருந்தினர்களும் கலந்து கொண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட இறகுப்பந்து கழக தலைவர், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையில் மண்டல இயக்குனர் பேராசிரியர் டாக்டர் லயனல்ராஜ் பேசுகையில் திருநெல்வேலியில் முதன் முதலாக 19 வயதிற்கு உட்பட்டோர்கான இறகுப்பந்து போட்டி நடைபெறுகிறது. இன்று முதல் ஐந்து நாட்கள் போட்டியானது நடைபெறும் 17 ஜனவரி அன்று இறுதிப்போட்டி நடைபெறும் தமிழ்நாடு முழுவதும் 208 வீரர்கள் 258 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் வீரர்கள் பரிசு அன்று வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

# திருச்செங்கோடு விவேகானந்தா கல்வி நிறுவனங்களில் சமத்துவ பொங்கல் விழா மற்றும் ஆண்டாள் திருக்கல்யாண வைபவம்





நாமக்கல் ஜன.15.

திருச்செங்கோடு விவேகானந்தா கல்வி நிறுவனங்களில் தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா மற்றும் ஆண்டாள் திருகல்யாணம் நிகழ்வுகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு விவேகானந்தா கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனையின் தாளாளர் மற்றும் செயலர் டாக்டர் மு.கருணாநிதி தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் விவேகானந்தா கல்வி நிறுவனங்களில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் உள்ள ஒவ்வொரு துறையின் சார்பாக மாணவிகள் பொங்கல் வைத்து இயற்கை தெய்வங்களான பஞ்சபுதங்களுக்கு நன்றி தெரிவித்து வழிபட்டனர். இதில் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறையின் சார்பாக, நடைபெற்ற ஆண்டாள் அழகர் திருமணத்தில், பல்வேறு துறை சார்ந்த மாணவிகள் முளைப்பாரி மற்றும் சீர்தட்டுக்களுடன் மேளதாளம் முழங்க ஸ்ரீ வித்யாவிநாயகர் கோயிலுக்கு ஆண்டாள் அழகர் வேடமிட்ட மாணவிகளுடன் அணிவகுத்த வந்திருந்தனர். பின்னர் ஆண்டாள் அழகர் திருமண வைபவம் சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ்விழாவில் தாளாளர் மற்றும் செயலர் டாக்டர் மு.கருணாநிதி மேலாண்மை இயக்குநர் கிருஷ்ணவேணி கருணாநிதி துணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் அர்த்தநாரீஸ்வரன், இணைச் செயலாளர் டாக்டர் ஸ்ரீராகநிதி அர்த்தநாரீஸ்வரன், துணைத்தாளாளர் டாக்டர் கிருபாநிதி இயக்குநர் டாக்டர் நிவேதனா கிருபாநிதி விவேகானந்த கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் முனைவர் குப்புசாமி முதன்மை நிர்வாகி மீ.சொக்கலிங்கம் ,திறன் மேம்பாட்டு இயக்குனர் முனைவர் குமாரவேல், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.பேபிஷகிலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில், தேர்வாணையர் முனைவர் பத்மநாபன், இயக்குநர் மேனகா, வணிகவியல் துறையின் இயக்குநர் சசிக்குமார் விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் பிற கல்லூரி முதல்வர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். இதனைத்தொடர்ந்து மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை பேராசிரியர் ஸ்ரீதர் ராஜா தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கவிதா, மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# கடல் அலையில் சிக்கி 2 பேர் உயிரிழப்பு

சோழிங்கநல்லூர், ஜன.16

வேளச்சேரியைச் சேர்ந்தவர் மகேஷ்(வயது28). இவர் அதே பகுதியை சேர்ந்த நண்பர்களான வருண்குமார்(28) உள்பட 4 பேருடன் ஈஞ்சம்பாக்கம் கடற்கரைக்கு மோட்டார் சைக்கிளில் வந்தார்.

பின்னர் நண்பர்கள் அனைவரும் அங்குள்ள கடலில் இறங்கி குளித்தனர். அப்போது ராட்சத அலை மகேஷ் உள்பட 5 பேரையும் கடலுக்குள் இழுத்து சென்றது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் கூச்சலிட்டனர்.

சத்தம் கேட்டு வந்த அப்பகுதியை சேர்ந்த மீனவர்கள் அவர்களை காப்பாற்ற முயன்றனர். இதில் மகேஷ், வருண்குமார் ஆகியோர் கடலில் மூழ்கி மாயமானார்கள். மற்ற 3 பேரையும் அவர்கள் பத்திரமாக மீட்டனர்.

சிறிது நேரத்தில் கடலில் மூழ்கிய மகேசும், வருண்குமாரும் பிணமாக அதே பகுதியில் கரை ஒதுங்கினர். இதனை கண்டு அவரது நண்பர்கள் கதறி துடித்தனர். கடலில் மூழ்கியவர்களில் மீட்கப்பட்ட ஒருவர் ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

நீலாங்கரை போலீஸ் இன்ஸ்பெக்டர் மகேஷ்குமார் மற்றும் போலீசார் பலியான 2 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

ஏற்கனவே இந்த பகுதியில் உள்ள கடற்கரையில் குளிக்க வேண்டாம் என்று போலீசார் அறிவுறித்தி உள்ளனர்.

இதனை மீறி கடலில் இறங்கிய நண்பர்கள் 2 பேர் பலியாகிவிட்டனர்.

காணும் பொங்கலையொட்டி வரும் பொதுமக்கள் கடல் பகுதியில் இறங்காமல் இருக்க கூடுதல் போலீசார் கண்காணிப்பில் ஈடுபட உள்ளனர்.

# சமயபுரம் மாரியம்மன் கோவில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது

மண்ணச்சநல்லூர்: ஜன.16

திருச்சி அருகே உள்ள சமயபுரம் மாரியம்மன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் தைப்பூச திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும் வழக்கம். அதன்படி இந்த ஆண்டு தைப்பூசத் திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதனையொட்டி இன்று உற்சவம் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அம்மன் மரக்கேடயத்தில் கொடிமரம் முன்பு எழுந்தருளினார். இதனையடுத்து காலை 7.28 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது.



விழாவை முன்னிட்டு ஒவ்வொரு நாளும் இரவில் அம்மன் சிம்மம், பூதம், அன்னம், ரிஷபம், யானை,வெள்ளி சேஷ வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் திரு வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி தருகிறார். 8ம் நாளன்று அம்மன் வெள்ளிக்குதிரை வாகனத்தில் காட்சி தருகிறார். 9ம் நாள் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது.

10ம் நாளான 25ந் தேதி காலை 7 மணிக்கு மேல் 8 மணிக்குள் தைப்பூச விழாவிற்காக அம்மன் கண்ணாடி பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயம் கண்டருளி நொச்சியம், மண்ணச்சநல்லூர் வழியாக வடக்காவேரிக்கு சென்று அடைகிறார். அன்று மாலை கொள்ளிடம் வடகாவிரியில் தீர்த்த வாரி நிகழ்ச்சி நடைபெறுகிறது .

இதனை தொடர்ந்து இரவு 10 மணிக்கு மேல் தனது அண்ணனான ஸ்ரீரங்கம் ரங்கநாதரிடம் சீர்வரிசை பெரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்னர் 26ந் தேதி இரவு ஒரு மணி முதல் அதிகாலை 2 மணி வரை மகா அபிஷேகம் நடைபெறுகிறது.

தொடர்ந்து அம்மன் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சிஅளிக்கிறார். அன்று காலை முதல் இரவு வரை அம்மன் வழிநடை உபயம் கண்டருளுகிறார். பின்னர் இரவு பாஸான மண்டபத்திற்கு சென்றடைகிறார்.

அங்கு அம்மனுக்கு அபிஷேகம் நடைபெற்று பின்னர் கொடி மரம் முன்பு எழுந்தருளி கொடி இறக்கப்படுகிறது. தொடர்ந்து நள்ளிரவில் அம்மன் கேடயத்தில் எழுந்தருளி திரு வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார். இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் இணை ஆணையர் கல்யாணி தலைமையில் கோயில் பணியாளர்கள், கோயில் குருக்கள் செய்து வருகின்றனர்.

# வண்டலூர் உயிரியல் பூங்கா இன்று திறந்திருக்கும்: நிர்வாகம் அறிவிப்பு

வண்டலூர், ஜன.16

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்து அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வண்டலூரில் அமைந்துள்ளது. இங்கு 2 ஆயிரத்திற்கும் அதிகமான விலங்குகள் மற்றும் பறவைகள் உள்ளன. இந்த பூங்காவில் வெள்ளைப் புலிகள் வங்க புலிகள், சிங்கங்கள், சிறுத்தைகள், யானைகள், மனித குரங்கு காண்டாமிருகம், நீர்நாய், முதலைகள் உள்ளிட்ட ஏராளமான விலங்குகள் உள்ளது. இதனை தினந்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் பார்த்து செல்கின்றனர்.



வண்டலூர் பூங்காவிற்கு வழக்கமாக செவ்வாய்க்கிழமை விடுமுறை தினமாகும். இதற்கிடையில், இன்று (செவ்வாய்க்கிழமை) மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. இன்றைய தினம் பூங்காவுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிக அளவில் இருக்கும் என்பதால், வண்டலூர் உயிரியல் பூங்கா இன்று திறந்திருக்கும் என்று பூங்கா நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதன்படி, இன்று வண்டலூர் உயிரியல் பூங்கா, சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக திறந்திருக்கும்.

# மெட்ரோ ரெயில் சேவை ஞாயிறு அட்டவணைப்படி இயங்கும்

சென்னை, ஜன.16

பொங்கல் பண்டிகையையொட்டி ஏராளமான மக்கள் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளதால், மெட்ரோ ரெயில்களில் பயணிப்போர் எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், இன்றும் நாளையும் ஞாயிற்றுக்கிழமை அட்டவணைபடி மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, காலை 5 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், இரவு 8 மணி முதல் 10 மணி வரையிலும் 10 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி: மீண்டும் தொடங்கியது

மதுரை, ஜன.16

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி காலை முதல் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் 7 சற்று நடைப்பெற்று கொண்டிருக்கும் போது 556 காளைகள் அவிழ்த்த பின்பு ஒரு காளைக்கு காலில் அடிப்பட்ட காரணத்தால் 10 நிமிடம் நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.



காளையானது சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து செல்லப்பட்டது. இந்நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஜல்லிக்கட்டு போட்டியானது தொடந்து நடைப்பெற்று வருகிறது. போட்டியின் 8வது சுற்று ஆரம்பமாகி காளைகள் அவிழ்த்து விடப்பட்டுள்ளது. வீரர்கள் உற்சாகமாக காளைகளை அடக்க துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

# அகரம்சீகூர் அருகே கோவிலில் வெண்கல மணிகள் திருட்டு

அகரம்சீகூர், ஜன.16

பெரம்பலூர் மாவட்டம் அகரம்சீகூர் அருகே உள்ள அசூர் கிராமத்தில் அசூர் கிராமத்தில் இருந்து அந்தூர் கிராமத்திற்கு செல்லும் வழியில் சேரா குலத்தார் காட்டு கோவில் உள்ளது.

இந்த கோவிலில் அசூர் மற்றும் அந்தூர் உள்ளிட்ட சுற்று வட்டார கிராம பொதுமக்கள் வழிபட்டு வந்தனர். இந்த கோவிலில் பூசாரியாக பிச்சபிள்ளை என்பவர் இருந்து வருகிறார்.



இந்நிலையில் கடந்த 14ம் தேதி மாலை பூஜை செய்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டார் பின்னர் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நேற்று காலை பூஜை செய்வதற்காக சென்றார்.

அப்போது கோவிலில் சாமி முன்பு கட்டி இருந்த சுமார் 35 பல்வேறு அளவிலான வெண்கல மணிகள் திருடு போயிருந்தது தெரியவந்தது.

இது குறித்து கோவில் பூசாரி பிச்சப்பிள்ளை குன்னம் போலீசில் புகார் செய்தார். புகாரின் பேரில் குன்னம் போலீசார் விரைந்து வந்து கோவிலை பார்வையிட்டு வழக்கு பதிவு செய்து கோவில் மணிகளை திருடிய மர்ம நபர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.

# அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களை நிறுத்தியது தான் தி.மு.க.வின் சாதனை எடப்பாடி பழனிசாமி

ஓமலூர், ஜன.16

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள திண்டமங்கலம் கிராமத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பொதுமக்களுடன் சேர்ந்து 108 பொங்கல் வைத்து கொண்டாடினார்.

முன்னதாக அவர் ஓமலூரில் இருந்து மேட்டூர் செல்லும் சாலையில் இருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் விழா நடைபெறும் இடத்திற்கு மாட்டு வண்டி ஓட்டி வந்தார். தொடர்ந்து அவருக்கு வழி நெடுகிலும் மேளதாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 108 பொங்கல் வைக்கும் இடத்திற்கு சென்று எடப்பாடி பழனிசாமி பொங்கல் பானையில் பச்சரிசியை போட்டு தொடங்கி வைத்தார். தொடர்ந்து பொதுமக்களுடன்சேர்ந்து பொங்கல் கொண்டாடினார்.



அப்போது பொதுமக்கள் மத்தியில் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:

ஏழைகளுக்காக திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற அரசு அ.தி.மு.க. தான். அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை நிறுத்தியது தான் தி.மு.க.வின் சாதனை.

விவசாயிகளுக்காக தலைவாசலில் திறக்கப்பட்ட 1000 கோடி ரூபாய் மதிப்பிலான கால்நடை பூங்கா மூடிக்கிடப்பது வருத்தம் அளிக்கிறது. மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செயல்படாமல் தி.மு.க. அரசு செயல்படுகிறது.

வருகின்ற பாராளுமன்ற தேர்தல் முக்கிய தேர்தல். இந்த தேர்தல் தி.மு.க. அரசுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்.

தமிழகம், புதுச்சேரி சேர்த்து 40 தொகுதிகளில் போட்டியிடும் அ.தி.மு.க. மற்றும் கூட்டணி வேட்பாளர்களை மக்கள் ஆதரிக்க வேண்டும். தை பொங்கலை மகிழ்ச்சியாக கொண்டாடுவது போல தேர்தல் வெற்றியை நாம் கொண்டாடும் காலம் வந்து விட்டது.

சேலம் அ.தி.மு.க.வின் கோட்டை. சேலத்தில் இரட்டை இலக்கத்தில் வெற்றி பெற்ற ஒரே கட்சி அ.தி.மு.க. தான்.

தமிழகத்திலேயே சேலம் பாராளுமன்ற தொகுதியில் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். தி.மு.க.விற்கு பாடம் புகட்டும் வகையில் இந்த தேர்தல் அமைய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# திருச்சி விமான நிலையத்தில் ரூ.76 லட்சம் மதிப்பிலான தங்க நாணயங்கள் பறிமுதல்: 3 பேர் கைது

கே.கே. நகர், ஜன.16

வெளிநாடுகளில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு ஏற்றப்படும் விமானங்களில் அதிக அளவில் தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு கடத்தப்படும் தங்கத்தினை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். இருந்தும் திருச்சி விமான நிலையத்திற்கு வரும் பயணிகள் தங்கத்தை கடத்தி வருவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



இந்த நிலையில் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு வந்த பேட்டிக் ஏர் மற்றும் ஏர் ஏசியா விமானங்களில் பயணம் செய்த பயணிகளிடம் சந்தேகத்தின் அடிப்படையில் திருச்சி விமான நிலைய மத்திய வான் நுண்ணறிவு சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது அந்த விமானங்களில் பயணம் செய்த பயணிகள் 3 பேர் தங்கள் கொண்டு வந்த லக்கேஜ் அட்டைப்பெட்டியில் தலா 40 கிராம் எடையுள்ள 30 தங்க நாணயங்களை மறைத்து வைத்து கடத்தியது தெரியவந்தது.

இதனையடுத்து தங்க நாணயங்களை பறிமுதல் செய்த அதிகாரிகள் அவர்கள் 3 பேரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கடத்தி வரப்பட்ட தங்கத்தின் மொத்த எடை 1199 கிராம்.

அதன் இந்திய ரூபாயின் மதிப்பு 76 லட்சம் என தெரிய வருகிறது.

# அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் இந்தி கற்றுத்தர ஏன் இந்த பாரபட்சம் பொங்கல் விழாவில் தமிழிசை

சென்னை, ஜன.16

தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் சென்னை சாலிகிராமத்தில் உள்ள தனது இல்லத்தில் வைத்து தை திருநாளை கொண்டாடினார். அப்போது பாஜக தொண்டர்கள் சிலர் இது அக்கா பொங்கல், கவர்னர் அக்கா பொங்கல் என கோஷமிட்ட நிலையில், இடைமறித்த ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் இது ராமர் பொங்கல், அயோத்தி ராமர் பொங்கல் என தெரிவித்ததால் சிறிது நேரம் அங்கு சிரிப்பாலை ஏற்பட்டது. பொங்கல் விழாவையொட்டி அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது,



தனியார் பள்ளிகள் அனைத்திலும் இந்தி கற்றுக் கொடுக்கப்படுகிறது. அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் இந்தி கற்றுத்தர ஏன் இந்த பாரபட்சம். இந்தியை திணிப்பதை தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்று கூறுகிறார்கள். இந்தியை யாரும் திக்கவில்லை. புதிய கல்விக் கொள்கையை யாரும் ஏற்றுக் கொள்ளவே இல்லை என்று சொல்லு போது இதுதான் சமச்சீர் கல்வி இல்லாமல் போகிறது. தனியார் பள்ளியில் பயிலும் பிள்ளைகள் பல மொழிகளை கற்கிறார்கள். அரசு பள்ளி குழந்தைகளுக்கு அது தமிழகத்தில் மறுக்கப்படுகிறது.

தமிழகத்தில் எத்தனை பள்ளிகளில் இந்தி கற்றுதரப்படுகிறது என்பதை தெளிவுபடுத்தினால் தமிழகத்தில் இரு மொழி கொள்கை இருக்கிறதா? மூன்று மொழி கொள்கை இருக்கிறதா? பல மொழி கொள்கை இருக்கிறதா? இல்லையென்றால் பொய் மொழி கொள்கை இருக்கிறதா? என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதிகளில் வெற்றி பெற பாடுபட வேண்டும் பொங்கல் விழாவில் ஈபிஎஸ்

சேலம், ஜன.16

சேலம் மாவட்டத்தில் அதிமுக பொதுசெயலாளர் தனது தை பொங்கலை சிறப்பாக கொண்டாடினார். மக்கள் எடப்பாடி பழனிசாமியை மேளதாளத்துடன் ஓமலூர் பாலிகடை பகுதியில் இருந்து மாட்டு வண்டியில் ஊர்வலமாக அழைத்து சென்றனர். வழி எங்கும் பெண்கள் மலர்தூவி உற்சாக வரபேற்பு அளித்தனர். 150க்கும் மேற்பட்ட பானைகளில் பிரம்மாண்டமாக முறையில் பொங்கல் விழா நடைபெற்றது. பொங்கல் விழாவில் போது எடப்பாடி பழனிசாமி கூறியதாவது: சேலம் திண்மங்கலம் பகுதியில் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்த அனைவருக்கும் என்னுடைய பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். தைபொங்கல் போல தேர்தல் வெற்றியை மகிழ்ச்சியாக கொண்டாடுகின்ற நேரம் வந்துவிட்டது, தமிழகம் புதுச்சேரியில் 40 தொகுதிகளில் வெற்றி பெற பாடுபட வேண்டும். மக்கள் நமது கூட்டணியை ஆதரிக்க வேண்டும் வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



## ரூ.100 கோடி கிளப்பில் நுழைந்தது "நெரு" மோகன்லால் உற்சாகம்

கடந்த 2023 டிசம்பர் 21 அன்று மலையாள திரையுலக முன்னணி நடிகரான மோகன்லால் கதாநாயகனாக நடித்த "நெரு" திரைப்படம் உலகெங்கும் வெளியானது.

இந்தியாவில் 500 திரையரங்குகளிலும், உலகம் முழுவதும் 400 அரங்குகளிலும் வெளியானது.

2013ல் மோகன்லால் கதாநாயகனாக நடித்து வெற்றிகரமாக ஓடிய "திரிஷ்யம்" திரைப்படத்தை இயக்கிய ஜீத்து ஜோசப், நெரு திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்.

2021ல் இதே கூட்டணியின் "திரிஷ்யம்2" வெளியாகி வெற்றி திரைப்படமாக அமைந்தது.

வெளியாகி 25 நாட்களை நெருங்கும் நிலையில், திரைப்பட வெற்றிக்கு முக்கிய மைல்கல்லாக கருதப்படும் ரூ.100 கோடியை உலக வசூலில் தொட்டு விட்டதாக திரைப்பட குழு அறிவித்துள்ளது.

வெற்றியில் மகிழ்ச்சியடைந்துள்ள மோகன்லால் திரைப்பட குழுவினருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஐஎம்டிபி (IMDb) திரைப்பட மதிப்பீட்டு புள்ளிகளில் இத்திரைப்படம் 10க்கு 7.8 என மதிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பார்வை இழந்த பெண்ணின் மீது தாக்குதல் நடத்தி, சட்டத்தை வளைத்து, தண்டனையில் இருந்து தப்பித்த ஒரு பணக்கார இளைஞனுக்கு, மீண்டும் சட்டத்தின் மூலமே தண்டனை பெற்று தரும் வழக்கறிஞர் கதாபாத்திரத்தில் மோகன்லால் சிறப்பாக நடித்திருப்பது உலகெங்கும் ரசிகர்களை ஈர்த்து வருகிறது.

## இரண்டு அதிரடி லுக்கில் சூர்யா வைரலாகும் கங்குவா போஸ்டர்



நடிகர் சூர்யா தற்போது இயக்குனர் சிவா இயக்கத்தில் 'கங்குவா' படத்தில் நடித்து வருகிறார். ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தில் பாலிவுட் நடிகை திஷா பத்தானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கும் இப்படம் 3டி முறையில் சரித்திர படமாக 10 மொழிகளில் வெளியாகவுள்ளது. 'கங்குவா' திரைப்படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. இதையடுத்து சமீபத்தில் நடிகர் சூர்யா 'கங்குவா' திரைப்படத்தில் தனது காட்சிகளை நிறைவு செய்ததாக அறிவித்திருந்தார்.


இதைத்தொடர்ந்து 'கங்குவா' படத்தின் புதிய போஸ்டர் இன்று காலை 11 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. அதன்படி, தற்போது இந்த படத்தின் போஸ்டர் வெளியாகியுள்ளது. இரண்டு வித்தியாசமான தோற்றங்களில் சூர்யா இருக்கும் இந்த போஸ்டரை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் வைரலாக்கி வருகின்றனர்.

## நல்ல கதை அம்சம் கொண்ட திரைப்படங்களில் நடிக்க உள்ளேன் அருண் விஜய்





இயக்குனர் விஜய் இயக்கத்தில் அருண் விஜய் நடித்த 'மிஷன் சாப்டர் 1' திரைப்படம் புதுவை பி.வி.ஆர். சினிமாவில் வெளியானது. புதுச்சேரி வந்த நடிகர் அருண்விஜய் 'மிஷன் சாப்டர் 1' திரைப்படத்தை ரசிகர்களுடன் அமர்ந்து பார்த்து ரசித்தார். பின்னர் ரசிகர்களுடன் கலந்துரையாடினார். நூற்றுக்கணக்கான ரசிகர்கள் அவருடன் செல்பி எடுத்தனர். நடிகர் அருண் விஜய் நிருபர்களிடம் கூறியதாவது: 'மிஷன் சாப்டர் 1' படத்திற்கு பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்த பொங்கல் பண்டிகையை மிஷன் பொங்கலாக கொண்டாடி வருகிறோம். படம் வெளியாகி உள்ள தியேட்டர்களை அதிகப்படுத்த உள்ளோம். வரும் காலங்களில் நல்ல கதை அம்சம் கொண்ட திரைப்படங்களில் நடிக்க உள்ளேன். அடுத்து இயக்குனர் பாலாவின் 'வணங்கான்' என்ற படத்தில் நடித்து வருகிறேன். இந்த திரைப்படம் எனது வாழ்க்கையில் ஒரு முக்கியமான திரைப்படமாக இருக்கும். புதுவை மக்களுடன் அமர்ந்து படம் பார்த்தது ஒரு புதிய அனுபவத்தை கொடுத்திருக்கிறது. மிகப்பெரிய சந்தோஷமாக இருக்கிறது. இந்த படத்தை பார்த்துவிட்டு மக்கள் சூப்பராக இருக்கிறது என்று சொல்லும் போது ஏற்படும் சந்தோஷம் வேறு ஏதும் இல்லை. நடிகர் சங்க கட்டிடத்திற்கு விஜயகாந்த் பெயர் வைப்பது நல்ல விஷயம். அது அவருக்கு மரியாதை செலுத்துவதாக இருக்கும். ஏனென்றால் சங்கத்தை மீட்டு கொடுத்தது விஜயகாந்த் தான் என்றார்.



## தங்கலான் ரிலீஸ் குறித்து பட நிறுவனம் அறிவிப்பு



இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் நடித்துள்ளனர். ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர், டீசர் தங்கலான் படத்திற்கான எதிர்பார்ப்பை ரசிகர்கள் மத்தியில் மேலும் அதிகப்படுத்தி இருக்கிறது. விக்ரமின் தோற்றம் மற்றும் மிரட்டலான நடிப்பு உள்ளிட்டவை ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, தங்கலான் படம் வரும் 26ம் தேதி ரிலீசாகும் என தகவல் வெளியானது. இந்நிலையில், இன்று பொங்கல் தினத்தை முன்னிட்டு தங்கலான் படத்தின் ரிலீஸ் குறித்து படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, தங்கலான் திரைப்படம் உலகம் முழுவதும் வரும் ஏப்ரல் மாதத்தில் திரைக்கு வரவுள்ளதாக பட நிறுவனம் போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

## 'வேட்டையன்' போஸ்டரை வெளியிட்ட படக்குழு

ஜெயிலர் படத்தைத் தொடர்ந்து ரஜினியின் 170வது படத்தை 'ஜெய்பீம்' இயக்குநர் த.செ.ஞானவேல் இயக்குகிறார்.

படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. இசை – அனிருத். இந்தப் படத்தில் முக்கிய வேடத்தில் அமிதாப் பச்சன், ஃபகத் ஃபாசில், ராணா, துஷாரா விஜயன், மஞ்சு வாரியார், ரித்திகா சிங் உள்ளிட்டோர் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு வேட்டையன் எனப் பெயரிட்டுள்ளனர். தூத்துக்குடி மற்றும் சென்னையில் படப்பிடிப்புகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், பொங்கலை அன்றுபுதிய போஸ்டரை வெளியிட உள்ளதாகத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்திருந்தது. இந்நிலையில் இன்று பொங்கலை முன்னிட்டு வேட்டையன் படத்தில் இருந்து ஸ்பெஷல் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில், இனிய பொங்கல் நல்வாழ்த்துகள் என ரசிகர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள படக்குழு, ரஜினி துப்பாக்கியுடன் ஸ்டைலாக நடந்து வரும் போஸ்டரை வெளியிட்டுள்ளது. இந்த போஸ்டரில் கூலர்ஸ் அணிந்துபடி செம்ம கெத்து காட்டியுள்ளார் தலைவர்.

இதனையடுத்து வேட்டையன் ஸ்பெஷல் போஸ்டரை ரசிகர்கள் ஆவர்வத்துடன் பார்ப்பதுடன் சமூக வளைதளங்களில் ட்ரெண்ட் செய்து வருகின்றனர். மேலும், படத்தின் ரிலீஸ் தேதி எப்போது எனவும் கேட்டு வருகின்றனர். பொங்கலுக்கு வெளியாக வேண்டிய லால் சலாம், அடுத்த மாதம் ரிலீஸாகவிருப்பதால், விரைவில் வேட்டையன் ரிலீஸ் அப்டேட்டும் கிடைக்குமா என ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

## இறுதியில் அதிரடி காட்டிய முஜீப் உர் ரகுமான் இந்தியாவுக்கு 173 ரன்கள் இலக்கு நிர்ணயித்த ஆப்கானிஸ்தான்




இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் மொகாலியில் நடந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இந்தியாஆப்கானிஸ்தான் அணிகள் இடையிலான 2வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி மத்தியபிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள ஹோல்கர் ஸ்டேடியத்தில் இன்று தொடங்கியது. போட்டியில், கில், திலக் வர்மாவுக்கு பதில் விராட் கோலி மற்றும் ஜெய்ஸ்வால் அணியில் இடம் பிடித்தனர்.

இதில் டாஸ் வென்ற இந்திய அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. பேட்டிங்கை தேர்வு செய்தது.

அதனால், ஆப்கானிஸ்தான் அணி பேட்டிங் செய்ய முதலில் களமிறங்கியது.

இதில், அதிகபட்சமாக குல்பாடின் நைப் அரை சதம் அடித்து 57 ரன்கள் எடுத்தார். தொடர்ந்து, நஜ்புள்ளா சத்ரான் 23 ரன்களும், கரிம் ஜனாட் 20 ரன்களும், குர்பாஜ் மற்றும் முகமது நபி ஆகியோர் தலா 14 ரன்களும், எடுத்தனர்.

இறுதியில் முஜீப் ரகுமான் 9 பந்துகளில் 21 ரன்களை குவித்து அதிரடி காட்டினார்.

முதல் இன்னிங்ஸ் முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவருக்கு அனைத்து விக்கெட் இழப்பிற்கு 172 ரன்களை எடுத்தது.

இதன்மூலம், இந்திய அணி 173 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்குகிறது.

## ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 2வது டி20: இந்தியா பந்து வீச்சு தேர்வு



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் மொகாலியில் நடந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இந்தியாஆப்கானிஸ்தான் அணிகள் இடையிலான 2வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி மத்தியபிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள ஹோல்கர் ஸ்டேடியத்தில் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இந்திய அணி பந்து வீச்சு தேர்வு செய்தது. கில், திலக் வர்மாவுக்கு பதில் விராட் கோலி மற்றும் ஜெய்ஸ்வால் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

இவ்விரு அணிகளும் இதுவரை 20 ஓவர் சர்வதேச போட்டியில் 6 முறை நேருக்கு நேர் மோதி இருக்கின்றன. இதில் 5 ஆட்டங்களில் இந்தியா வெற்றி கண்டுள்ளது. ஒரு ஆட்டம் முடிவு இல்லாமல் போனது. ஆப்கானிஸ்தான் ஒன்றில் கூட வெற்றி கண்டதில்லை.

இந்தூர் மைதானத்தில் இந்திய அணி மூன்று 20 ஓவர் போட்டியில் ஆடி 2ல் வெற்றியும், ஒன்றில் தோல்வியும் அடைந்து இருக்கிறது. கடைசியாக இங்கு 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான 20 ஓவர் ஆட்டத்தில் 49 ரன் வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வி கண்டது. அந்த ஆட்டத்தில் தென்ஆப்பிரிக்கா 227 ரன்கள் குவித்தது.

எனவே இந்த ஆட்டத்திலும் ரன் மழைக்கு பஞ்சம் இருக்காது என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. போட்டிக்கான இரு அணிகளின் உத்தேச பட்டியல் வருமாறு:

இந்தியா: ரோகித் சர்மா (கேப்டன்), ஜெய்ஸ்வால், விராட்கோலி, ஷிவம் துபே, ரிங்கு சிங், ஜிதேஷ் ஷர்மா, அக்ஷர் பட்டேல், வாஷிங்டன் சுந்தர், ரவி பிஷ்னோய், அர்ஷ்தீப் சிங், முகேஷ்குமார்.

ஆப்கானிஸ்தான்: ரமனுல்லா குர்பாஸ், இப்ராகிம் ஜட்ரன் (கேப்டன்), அஸ்மத்துல்லா ஓமர்ஜாய், முகமது நபி, நஜ்புல்லா ஜட்ரன், கரிம் ஜனாத், குல்படின் நைப், முஜீப் ரகுமான், நவீன் உல்ஹக், பசல்ஹக் பரூக்கி, நூர் அகமது.

## ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 2வது டி20: உலக சாதனை படைத்த ரோகித் சர்மா



இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் அணி, 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. மொகாலியில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் இந்திய அணி தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், மத்திய பிரதேசத்தில் உள்ள இந்தூர் மைதானத்தில் இந்தியாஆப்கானிஸ்தான் இடையிலான 2வது டி20 கிரிக்கெட் போட்டி தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா பந்து வீச்சை தேர்வு செய்துள்ளார்.

இன்று நடைபெறும் போட்டியில் விளையாடுவதன் மூலம் கேப்டன் ரோகித் சர்மா புதிய உலக சாதனையை படைத்துள்ளார். சர்வதேச டி20 போட்டிகளில் 150 ஆட்டங்களில் விளையாடிய முதல் வீரர் என்ற பெருமையை ரோகித் சர்மா பெற்று உள்ளார்.

இதுவரை எந்த வீரரும் ரோகித் சர்மா அளவுக்கு அதிகமான போட்டிகளில் விளையாடியது கிடையாது. அவருக்கு அடுத்தபடியாக அயர்லாந்து அணியின் கேப்டன் பால் ஸ்டிர்லிங் 134 போட்டிகளில் பங்கேற்று 2வது இடத்தில் உள்ளார்.

இந்திய அணியை பொருத்தளவில் ரோகித்திற்கு அடுத்த இடத்தில் நட்சத்திர பேட்ஸ்மேன் விராட் கோலி உள்ளார். அவர் 115 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 2வது இடத்தில் உள்ளார்.

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: இத்தாலி வீரர் ஷின்னர் 2வது சுற்றுக்கு தகுதி



இந்த ஆண்டின் முதல் கிராண்ட்சிலாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் இன்று தொடங்கியது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4வது வரிசையில் உள்ள ஜானிக்ஸ் ஷின்னர் (இத்தாலி) தொடக்க சுற்றில் நெதர்லாந்தை சேர்ந்த போடிக் வான் டேவை எதிர் கொண்டார்.

இதில் ஷின்னர் 64, 75, 63 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றார். மற்ற முதல் சுற்று ஆட்டங்களில் மேட்டோ அர்னால்டி (இத்தாலி), ஜெவுமி முனார் (ஸ்பெயின்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த ஆட்டங்களில் 9வது வரிசையில் உள்ள பார்பரா (செக் குடியரசு), லெசியா (உக்ரைன்) ஆகியோர் வெற்றி பெற்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.



**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தா றோம்பல் தலை**

**விளக்கம்:**
தென்புலத்தார், தெய்வம் விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.